**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: CC No.373/2023**
**Deposition of witness for prosecution –PW–1 (LW 1 )**

| | | |
|---|---|---|
| Name | : | சுந்தரமூர்த்தி |
| F/H Name | : | சேகர் |
| Village | : | பனையூர் |
| Taluk | : | |
| District | : | |
| Calling | : | சென்டிரிங் வேலை |
| Age | : | 34 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central act 44 of 1969) on the 24th day of June 2026.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து சென்டிரிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 4,5 வருடங்களுக்கு முன்பு என் தங்கை கணவரை தேடிச்சென்றபோது தடுமாறி கீழே விழுந்து விட்டேன். அதில் தலையில் காயம் ஏற்பட்டது. இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன். சிகிச்சையில் இருந்த போது போலீசார் என்னிடம் எழுதி வைத்துக்கொண்டு கையெழுத்து மட்டும் வாங்கினார்கள். நான் படித்து பார்க்கவில்லை. புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.1** ஆகும். வழக்கு பற்றி எந்த விவரமும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி மேற்படி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

நானும் எதிரியும் சமாதானமாகிவிட்டோம். சமாதான மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான். கடந்த 27.09.2020 ம் தேதி

என் தங்கை கணவரை எதிரி போன் செய்து முன் விரோதம் காரணமாக வரவழைத்து அங்கு வைத்து அசிங்கமாக பேசி உடம்பில் மாறி மாறி காயத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. தகவல் அறிந்த நானும் எனது தங்கையும் சென்று பார்த்தபோது என்னையும் அசிங்மாக பேசி கீழே கிடந்த கட்டையை எடுத்து என் தலையில்அடித்து காயப்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. எனது உறவினர்கள் உதவியோடு இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்த போது அங்கு வந்த போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்று விசாரணையில்சொல்லிவிட்டு தற்போது எதிரியோடு சமாதானம் ஆகிவிட்டேன் என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு கு.வி</u>**

நான் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டேன் என்றாலும் இந்த வழக்கை எனக்கு மேற்கொண்டு நடத்த விருப்பம் இல்லை என்றாலும் சரிதான்.

மறு விசாரணை – இல்லை

HARIHARASUDHAN J

Digitally signed by HARIHARASUDHAN J
Date: 2026.06.24 12:35:31 +0530

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: CC No.373/2023**
**Deposition of witness for prosecution –PW–2 (LW 2 )**

| | | |
|---|---|---|
| Name | : | நல்லசிவம் |
| F/H Name | : | நல்லதம்பி |
| Village | : | கலைவாய்ஏந்தல் |
| Taluk | : | |
| District | : | |
| Calling | : | லோடுமேன் |
| Age | : | 35 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central act 44 of 1969) on the 24th day of June 2026.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து லோடுமேனாக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 எனது மைத்துனர். 4,5 வருடங்களுக்கு முன்பு எதிரி அவர் மகள் பிறந்தநாள் விழாவிற்கு அழைத்ததின் பேரில் நான் சென்றபோது தடுமாறி கீழே விழுந்து விட்டேன். அதில் தலையில் காயம் ஏற்பட்டது. இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன். வழக்கு பற்றி எந்த விவரமும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>(அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி மேற்படி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை)</u>**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நாங்களும் எதிரியும் சமாதானமாகிவிட்டோம். சமாதான மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான். கடந்த 27.09.2020 ம் தேதி என்னை எதிரி போன் செய்து முன் விரோதம் காரணமாக வரவழைத்து அங்கு

வைத்து அசிங்கமாக பேசி உடம்பில் மாறி மாறி காயத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. தகவல் அறிந்து எனது மைத்துனரும் எனது மனைவியும் வந்து பார்த்தபோது அவரையும் அசிங்மாக பேசி கீழே கிடந்த கட்டையை எடுத்து அ.சா.1ன் தலையில் அடித்து காயப்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. எனது உறவினர்கள் உதவியோடு இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்த போது அங்கு வந்த போலீசாரிடம் அ.சா.1 புகார் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதில் எனது மனைவி அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தார் என்று விசாரணையில்சொல்லிவிட்டு தற்போது எதிரியோடு சமாதானம் ஆகிவிட்டேன் என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு கு.வி</u>

நான் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டேன் என்றாலும் இந்த வழக்கை எனக்கு மேற்கொண்டு நடத்த விருப்பம் இல்லை என்றாலும் சரிதான்.

மறு விசாரணை – இல்லை.

HARIHARASUDHAN J

Digitally signed by HARIHARASUDHAN J
Date: 2026.06.24 12:35:44 +0530

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: CC No.373/2023**
**Deposition of witness for prosecution –PW–3 (LW 8)**

| | | |
|---|---|---|
| Name | : | கலா |
| F/H Name | : | ராமநாதன் |
| Village | : | இராமநாதபுரம் |
| Taluk | : | |
| District | : | |
| Calling | : | சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| Age | : | 50 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central act 44 of 1969) on the 24th day of June 2026.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது பஜார் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். பஜார் காவல் நிலைய குற்ற எண் 457/2020 பிரிவுகள் 294(b), 323, 324 IPC ஆக பதிவு செய்த சார்பு ஆய்வாளர் சகாயராணி தற்போது பணி மாறுதலாகி வேறு காவல் நிலையத்தில் பணி புரிந்து வருகிறார். அவரது கையொப்பம் எனக்கு தெரியும். கூடுதல் சாட்சியாக சேர்க்கப்பட்டு ஆவணங்களின் அடிப்படையில் தற்போது நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 27.09.2020ம் தேதி சார்பு ஆய்வாளர் சகாயராணி நிலைய பொறுப்பில் இருந்த போது இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு சிகிச்சையில் இருந்த அ.சா.1 சுந்தரமூர்த்தி கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று பின்பு பார்வையிட்டு நிலைய குற்ற எண் 457/2020 பிரிவுகள் 294(b), 323, 324 IPC ஆக வழக்கு பதிவு செய்து புகாரையும் முதல் தகவல் அறிக்கையும் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அவர் பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2, புகார் மனு அ.சா.ஆ.3** ஆகும். பின்பு வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முருகன், சத்தியேந்திரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த **பார்வை மகஜர்**

**அ.சா.ஆ.4** ஆகும். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5** ஆகும். பின்பு சாட்சிகள் சுந்தரமூர்த்தி, நல்லசிவம், ஜெயசூர்யா, முருகன், சத்தியேந்திரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரிகளை 27.02.2021ம் தேதி அரண்மனை முன்பு வைத்து கைது செய்து காவல் நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்னர் காயம் பட்ட அ.சா.1, 2 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் கோவிந்தன் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடுகள் பெற்றுள்ளார். அந்த விபத்து பதிவேடுகள் **அ.சா.ஆ.6, அ.சா.ஆ.7** ஆகும். பின்பு விசாரணை முடித்து எதிரிகள் மீது அதே பிரிவின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் உள்ள ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னால் தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பொய் புகாரை சரிவர பரிசீலனை செய்யாமல் எதிரியின் மீது வழக்கு பதிவு செய்து இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை–இல்லை.

HARIHARASUDHAN J

Digitally signed by HARIHARASUDHAN J
Date: 2026.06.24 12:35:56 +0530